

# எமது கல்வி முயற்சிகள்: முடிவுறாப் பயணங்கள்

அமரர் **கணபதி இராசதுரை** நினைவாக

நினைவுப் பேருரை

நிகழ்த்தியவர்:

கவிஞர் **சோ.பத்மநாதன்** (முன்னாள் அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

யாழ் மத்திய கல்லூரி - 28. 10. 2011



கவிஞர் சோ. பத்மநாதன்

## முன்னீடு

அதிபர் அவர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே, நலன் விரும்பிகளே, அமரர் இராசதுரையின் குடும்பத்தவர்களே, இவ்வைபவத்தை ஏற்பாடு செய்த நினைவுக்குழுவினரே.

நீண்டதொரு பாரம்பரியமுடைய மத்தியகல்லூரியில் நிர்வாகத்திறமை மிக்க அதிபராக தம் பெயரை நிறுவிய அமரர் கணபதி இராசதுரை நினைவாக இப்பேருரையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். கந்தப்பு ஆறுமுகம் என்ற இளைஞன் இங்கு ஆங்கிலம் கற்றுப்பின் பீற்றர் பேர்சிவலுக்குத் தமிழாசிரியராகி அவரால் “மம குரு” என்று கொண்டாடப்பட்டதும் அப்பண்டிதரைக்கொண்டு

பைபிளை மொழி பெயர்த்ததும் அதைத் தமிழ்நாட்டில் அங்கீகாரம் பெற்றதும் அவ்விளம் பண்டிதர் ஆறுமுகநாவலராக ஈழநாடு திரும்பியதும் வரலாற்றுச் செய்திகள். அவ்வரலாற்றின் முக்கிய அம்சம் யாதெனின் பேஉசிவலும் நாவலரும் தத்தமது சமயத்தை இறுகப்பற்றியொழுகிய போதும் ஒருவர் மீதொருவர் மதிப்பும் மரியாதையும் செலுத்தினர் என்பதே. இந்தப் பண்பாடுதான் மத்திய கல்லூரி தமிழ்ச்சமூகத்திற்கு அளித்த மிகப்பெரும் கொடை என்று கருதுகின்றேன். அமரர் இராசதுரையையும் அவர் சகோதரர்களையும் நீண்ட காலமாக நானறிவேன். இராசதுரையோடு நெருக்கம் ஏற்பட்டது 1990 இல் என ஞாபகம். அப்போதுதான் "முரசொலியின்" ஆசிரிய பீடத்தில் ஆலோசகனாக இருந்தேன். இராசதுரை முரசொலியில் ஒரு கட்டுரைத் தொடர் எழுதினார். அது பற்றி உரையாட அடிக்கடி அலுவலகம் வருவார்.

அதன்பின் அவர் விசுவரூபத்தைக் கண்டது மத்தியகல்லூரியின் அதிபர் பொறுப்பை அவர் ஏற்றபின். எமது ஆசிரிய மாணவர்களின் கற்பித்தலை மேற்பார்வை செய்யப்போகும் வேளைகளில் இராசதுரையின் நிர்வாகத் திறனைக்கண்டு வியந்திருக்கிறேன்.

அத்திறமைசாலியின் வாழ்நாள் குரூரமாகத் தறிக்கப்பட்டதால் கல்லூரிக்கும் தமிழ்ச்சமூகத்திற்கும் ஏற்பட்ட இழப்பு மிகப் பெரிது.

அந்த நல்ல மனிதன் செய்த மகத்தான பணியை மக்கள் மறக்கவில்லை என்பதற்கு இவ்வைபவம் எடுத்துகாட்டு.

உரை

## நமது கல்வி முயற்சிகள்: முடிவுறாத பயணங்கள்.

### கல்வி எதற்காக?

"ஒருவர் எதற்காகக் கற்க வேண்டும்" என்ற கேள்விக்கு தத்துவஞானிகளும், கல்வியியலாளர்களும் காலத்துக்குக் காலம் விடையளித்து வந்துள்ளனர். இறைவன் தாள்தொழாத கல்வியால் பயனில்லை என்று வள்ளுவரும், மனிதனுள் ஏலவே இருக்கும் தெய்வீகத்தை துலங்கச் செய்வதே கல்வி என்று விவேகானந்தரும், ஒருவனைத் தான் வாழும் சமூகத்தோடு இணங்கி வாழத்துணை செய்வதே கல்வி எனப்பிறரும் கூறிப்போந்தனர். கல்வி என்றதும் பள்ளிக்கூடம், பாடங்கள், பரீட்சை என்ற கருத்தே பலர் மத்தியில் நிலை கொண்டுள்ளது. மாணவர் மூளைகளுக்குள் தகவலைத் திணிப்பது கல்வியல்ல. தகவல் தான் கல்வியென்றால், எமது நூலகங்கள் ஞானிகளாகவல்லவோ விளங்க வேண்டும்?

தேர்வுகளில் உச்சப்புள்ளிகள் பெறுவதுதான் கல்வியின் இலக்கு என்பதுமல்ல. நற்பண்பை வளர்க்கும், நல்ல குடிமக்களை உருவாக்கும் கல்வியே வேண்டப்படுவது. அடிநிலை மக்களை வாழ்க்கைப்

போராட்டத்திற்கு தயார் செய்யாத கல்வியால் என்ன பயன்? தத்துவங்கள் எல்லாம் ஒருபுறமிருக்க, எமது சமூகத்தில் கல்வி ஜீவனோபாயத்துக்கு ஒரு கருவியாகத் தாழ்ந்து போயுள்ளது. "நான் அறிவுக்காகப் படிக்கிறேன்" என மறந்தும் ஒரு பிள்ளை சொல்வதில்லை.

முதலாம் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வி பெற்ற பட்டதாரிகள் கூட்டம் போட்டு, சங்கம் அமைத்து வேலை தரும்படி அரசாங்கத்தைக் கோருகின்றனர். மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசியற்கட்சிகள் தேர்தலைக் கருத்திற்கொண்டு ஆசிரிய நியமனங்களை வழங்குகின்றன. பொருளியற்பட்டதாரி வகுப்புகளில் தூங்குகின்றார். நூலகம் இல்லாத பாடசாலையில் நூலக விஞ்ஞானம் கற்ற ஒருவர் மட்டை அடிக்கிறார். பௌதீக விஞ்ஞானம் (சிறப்பு) பட்டம் பெற்ற ஒருவர் பிரதேசச்செயலாளராகிறார். புவியியற்பட்டதாரி வங்கி முகாமையாளராக இருக்கிறார். விவசாயப்பட்டதாரி பண்ணைக்குள் இறங்காமலே பணிமனைக்குள் file களைப் புரட்டிக்கொண்டிருக்கிறார். இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? நாம் வழங்கும் கல்விக்கும் நாட்டின் தேவைகளுக்கும் இடையிலுள்ள mismatch (இயைபின்மை)யையே. மக்களுடைய வரிப்பணத்தில் 17-18 வருடம் கல்வி கற்று வாழ்க்கை வசதிகளைத் தேடிக்கொண்ட எத்தனை பேருக்கு, தாம் பொது மக்களிடம் கடன் பட்டிருக்கிறோம் என்ற நினைப்பிருக்கிறது? நாட்டின் தேவைகள் எவை எவை? அத்தேவைகளைப் பூர்த்தி செய்யவல்லவர்களை எமது கல்விக்கூடங்கள் உருவாக்குகின்றனவா? வளர்ந்து வரும் தொழிற்துறைகளில் பணியாற்றக்கூடிய பட்டதாரிகள் ஒரு சிறு தொகையினர் போக, பெரும்பான்மையானோர் எந்த வேலைக்கும் லாயக்கற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம் ஆகியவை மதிப்புமிக்க துறைகளாகவும் ஏனையவை தரத்தில் தாழ்ந்தவையாகவும் கருதப்படுகின்றன.

பிள்ளைகள் அழகியற்கலைகள் கற்பதை பெற்றோர் விரும்புகிறார் களில்லை. பிள்ளைக்கு எந்தப்பாடத்தில் ஈடுபாடுண்டோ, எந்தப்பாடத்தில் திறமையிருக்கிறதோ, அந்தப்பாடத்தைப் படிக்கவல்லவா அவனை ஆற்றுப்படுத்த வேண்டும்! அதைவிடுத்து பெற்றோரின் ஆசைகளையும் (நிராசைகளையும்) பிள்ளை மீது சுமத்துவது நியாயமா?

பரீட்சை முறைமை

கல்வித்துறையில் பரீட்சைகள் அளவுக்கு மிஞ்சிய முக்கியத்துவம் வகிக்கின்றன. ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் தேர்வைப்பார்ப்போம். அத்தேர்வின் நோக்கமே வறிய குடும்பத்துப் பிள்ளைகளுக்கு உதவுவதுதான். அதிக வருமானம் பெறும் பெற்றோருடைய பிள்ளைகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவானேன்? ஆக இப்பரீட்சை இன்று முன்னணிப்பாடசாலைகளுக்கு அனுமதி பெறும் ஓர் உபாயமாகவே பயன்படுகிறது. புலமைப்பரிசில் தேர்வுக்கு பிள்ளைகளை "உருவேற்றிக்" கொண்டிருக்கும் பெற்றோர்களும் இரக்கம் இல்லாதவர்களே.

ஐந்தாம் வகுப்பில் உச்சப்புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகளையும், க.பொ.த சாதாரண, உயர்தரங்களில் A,B பெறும் பிள்ளைகளையும் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திப் பாராட்டும் ஒரு கலாச்சாரம் வளர்ந்து வருகின்றது. 10 பிள்ளைகள் பாராட்டுப் பெறுகையில் 90 பிள்ளைகள் தாம் கையாலாகாதவர்கள் என்ற தாழ்வுச் சிக்கலுக்கு உள்ளாகின்றனர். அவர்கள் பெற்றோர்கள் தாம் அடையும் ஏமாற்றத்தைப்பிள்ளைகள் மேல் சுமத்து கின்றனர்.

ஒரு பிள்ளை ஏனைய பிள்ளைகளை முந்தி முன்னுக்கு வருவதல்ல திறமை. அவன் தன்னை முந்த வேண்டும். "He must excel himself" என Dr. சிவப்பிரகாசம் 40 வருடத்துக்கு முன் சொன்னது காதில் ஒலிக்கிறது. சென்ற தவணை அவன் பெற்ற புள்ளிகளை விட இம்முறை கூட எடுத்திருந்தால், முன்னேறியிருக்கிறான்

என்பது பொருள்.

ஐந்தாம் வகுப்பில் உச்சப்புள்ளி பெற்று முன்னணிப் பாடசாலைகளில் நுழைந்தவர்கள் எத்தனை பேர் க.பொ.த(சா/த) வில் சோபிக்கிறார்கள்? க.பொ.த (சா/த)வில் 10A பெற்றவர்களில் எத்தனை பேர் பல்கலைக்கழகம் செல்கிறார்கள் என ஆய்வு செய்தால் அதிர்ச்சிகள் காத்திருக்கும்.

இப்பரீட்சைகள் குவிசிந்தனையை (convergent thinking) ஊக்குவிக்கின்றனவே தவிர, விரிசிந்தனைக்கு (divergent thinking) வழிகோலுவனவாயில்லை. உளச்சார்புத் தேர்வில் ஒருபகுதி மொழித்திறனை மதிப்பிடுவது. ஒத்தசொல்லைத் தெரிவது அதில் ஒன்று. ஒத்த சொற்களாக வழங்குபவை நூறுவீதம் ஒத்திருப்பதில்லை என மொழியியலாளர் கூறுவர். "அறம்" என்பதற்கு "தர்மம்" ஒத்த சொல் ஆகாது. "ஐய" த்துக்கும் "பிச்சை"க்கும் வேறுபாடுண்டு. "வாய்மை", "உண்மை", "மெய்ம்மை" வெவ்வேறு பொருளின. "தொழுதல","வணங்குதல்" இரண்டும் வெவ்வேறு பொருளுடையவை. ஆக, தவறான எண்ணக்கருக்கள் பிள்ளைகள் மனங்களில் பதிவாகின்றன. ஒரு பாட அலகை ஏன் கற்கிறோம் என மாணவர்களுக்குத் தெரிய வேண்டும். நான் மாணவனாய் இருந்த காலத்தில் "நேரமும் தூரமும்" என்று கணிதத்தில் ஓர் அலகு. மணிக்கு 45 மைல் வேகத்தில் ஓடும் 240 அடி நீளமான புகையிரதம் 420 அடி மேடையைக்கடக்க எவ்வளவு நேரம் எடுக்கும்? இக்கணக்கைச் செய்து விடை காண்பதால் என்ன பயன்?

வாழ்க்கையோடு தொடர்புபடாத கல்வியை "ஏட்டுச்சுரைக்காய்" என இகழ்ந்தனர் நம் முன்னோர். தூயகணிதம், பிரயோககணிதம், உயர்கணிதம் எல்லாம் படித்தும் வானில் உள்ள கோள்கள் மற்றும் உடுத்தொகுதிகள் பற்றி ஏதும் அறியாத அப்பாவிகளையும் ஆயிரம் சாத்திரங்கள் கற்றும் கலையுணர்ச்சி அற்றவர்களாய் மரத்துப் போனவர்களையும் எண்ணி தான் மனம் வருந்தியதாகப் பாடினான் பாரதி

"கணிதம் பன்னிரண்டாண்டு பயில்வர்பின்
கார் கொள்வானிலோர் மீனிலை தேர்ந்திலார்
அணிகொள் சாத்திரம் ஆயிரங்கற்பினும்
ஆழ்ந்திருக்கும் கலையுளம் காண்கிலார்".

எமது தேர்வுகள் நெட்டுருச்செய்வோருக்கு உதவுகின்றனவே தவிர விவேகத்தைப் பிரயோகிக்க வாய்ப்புத் தருவதில்லை. ஒரு வாளியை என்னென்ன தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்? தண்ணீர் அள்ளலாம், குளிக்கலாம், உடுப்புத்தோய்க்கலாம், பூக்கன்று வளர்க்கலாம். திருமால் ஆதிசேடன் மீது அமர்ந்திருக்கிறார் என்றுதான் நாம் அறிகிறோம். ஆனால் பொய்கையாழ்வார் சொல்கிறார்.

"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள் கடலுள் – என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டடாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு"

இராமச்சந்திரக்கவிராயர் ஒரு பாக்குவெட்டி வைத்திருந்தார். ஒருநாள் அது காணாமல் போய்விட்டது. அது இல்லாமல் அவருக்கு ஒன்றும் நடக்காது.

பாடுகிறார்:

"விறகு தறிக்க கறிநறுக்க வெண்சோற்றுப்புக் கடகுவைக்க
பிறகு பிளகு கிடைத்த தென்றால் நாலாறாகப் பிளந்து கொள்ள
பறகு பறகென் றேசொறியப் பதமா யிருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் பறப்பதுண்டோ எடுத்தீ ராயின் கொடுப்பீரே!

பரீட்சைகள் திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்கத் தவறுவதுண்டு என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு ஐன்ஸ்ரைன். இயற்பியல் விஞ்ஞானம் படிக்க தகுதி போதாது என்று Swiss Federal Polytechnic School ஆல் தள்ளிவிடப்பட்டவர் தான் அவர். நினைத்துப்பாருங்கள். அறிவியல் துறை மிக முக்கியமென்று பின்னாளில் கொண்டாடப்போகும் இரண்டு கோட்பாடுகளைத்தந்த மேதையை பரீட்சை இனங்காணத்தவறிவிட்டது.

### கல்வியில் போட்டி

பரீட்சையோடு கூடவரும் கேடு போட்டி. பல்கலைக்கழகம் நுழைவதற்குப் போட்டி, உத்தியோகம் பெறுவதற்குப் போட்டி, மொழித்திறன் போட்டி என போட்டி இல்லாத கல்வியை மக்களால் நினைத்துப்பார்க்கவும் முடியவில்லை. இந்தப்போட்டிகள் முடிந்த பிறகு பதவி உயர்வுக்குப் போட்டி, புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு செல்வதற்குப் போட்டி என வாழ்நாளெல்லாம் போட்டியாகக் கழிகிறது. போட்டி தீவிரமடையும் போது குறிப்புக்களை மற்றவர்களுக்குக் காட்டாது ஒளித்தலும், நூலகங்களிலுள்ள பெறுமதியான புத்தகங்களின் சில தாள்களைக் கிழித்துக் கவர்வதும் கூச்சமின்றி செய்யப்படுகின்றன.

### சமயக்கல்வி

இன்று எவரும் கற்பிக்கக்கூடிய பாடமாக அதிபர்கள் கருதுவது சமயத்தை. வேறு பாடங்கள் பயின்ற ஆசிரியர்களுக்கு நேரசூசி வரையும் போது, இரண்டு பாடம் குறைந்தால் அவருக்கு சமயம் தரலாம். "பாடப்புத்தகம் இருக்கு படிப்பியுங்கோ!" என்பார் அதிபர். சமயம் வாசிப்புப் பாடமாகிவிட்டது. சமய நம்பிக்கை இல்லாதவர்கள் சமயம் கற்பிக்கக்கூடாது. இறைவழிபாட்டில் மூன்று நான்கு தேவாரங்களே மாறி மாறி ஓதப்படுகின்றன. பிழையாகப் பாடப்படும் திருமுறைகள் திருத்தப்படுவதில்லை. " குற்றாயினவாறு " "கொற்றவன் தன்னைக் கண்டுள்ளம் குளிர என் கண்கள் குளிர்ந்தனவே" " துள்ளுமத வேட்கைக் கணையாலே" என்ற பிழைகள் திருத்துவாரற்று பிள்ளைகள் நெஞ்சில் ஆழப்பதிந்துள்ளன.

சமயம் விஞ்ஞானத்தின் முன் நின்று பிடிக்காதெனப் பலர் நினைக்கிறார்கள். பிள்ளைகளும் நினைக்கலாம். சமய ஆசிரியர்கள் பாடநூல்களுக்கு அப்பால் தேட வேண்டும். "சமயம் இல்லாத விஞ்ஞானம் முடம், விஞ்ஞானமில்லாத

சமயம் குருடு" என்ற ஐன்ஸ்ரைனின் கூற்றை ஆதாரம் காட்ட வேண்டும். அல்லது "நான் இதுவரை தேடிக்கண்டவை கடற்கரையில் கிளிஞ்சில் பொறுக்கும் சிறுவன் தேடியவைக்குச் சமம்" என்ற நியூற்றனின் வாக்குமூலத்தை முன்வைக்கலாம்.

**ஆங்கிலக்கல்வி**

ஆங்கிலக்கல்வியின் நிலையை நோக்கினால், அது சரிவையே சந்தித்து வருவது காணலாம். 1956 இன் எழுச்சி சிங்களத்தை முதன்மைப் படுத்தியது மட்டுமல்லாமல், ஆங்கிலம் தேவையில்லை ஆங்கிலம் கற்பது தேசத்துரோகம் – ஆங்கில பாடத்தில் சித்தியடைவது கட்டாயமில்லை – என்ற நிலைப்பாட்டை எடுத்ததால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. இந்தியா, ஹிந்தியை அரச கரும மொழியாக அறிவித்தாலும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகத் தொடர அனுமதித்ததால், இன்று அங்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது. அதனால் மாணவர்கள் பயன் பெறுகிறார்கள். ஆங்கிலம் பேசுகிறார்கள். 2010 க.பொ.த (சா/த) தேர்வில் வடமாகாணத்தில் ஆங்கில பாடப்பெறுபேறுகளைத் தருகிறேன் : யாழ்ப்பாணம் – 40.92% , வலிகாமம் – 28% , வடமராட்சி 34.16% , தென்மராட்சி 31.25% , தீவகம் – 8.58% , கிளிநொச்சி 9.57% , முல்லைத்தீவு 14.51%.

பெரும் பணச்செலவில் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி தோல்வியில் முடிவது எதனால்? வகுப்பறையில் கற்கும் ஆங்கிலத்தை வெளியே பயன்படுத்த வாய்ப்பில்லை. போகும் இடமெல்லாம் தாய்மொழியே ஒலிக்கிறது. காதில் ஆங்கில மொழி விழாவிட்டால் பேச–உச்சரிக்க முடியாது. இதற்கு என்ன செய்யலாம்? இப்பொழுதுதான் எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சி உண்டே! தினமும் ஆங்கிலச் செய்திகளைக் கேட்க / பார்க்க வேண்டும். கிறிக்கெற் நேர்முக வர்ணனைகள் மிகுந்த பயனுடையவை. ஆனால் தமிழ்ச்சமூகம் மட்டரகமான தென்னிந்திய மெகா

சீரியல்களிலும், திரைப்படங்களிலும கட்டுண்டு கிடக்கிறது. அதை மீட்கவல்ல ரட்சகர் யார்?

ஆங்கில மொழி மூலம் கல்வி வழங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். International Schools ஆங்காங்கே முளைத்துள்ளன. அரசாங்கப் பாடசாலைகள் இரு மொழிப்பாடசாலைகளாவதில் முனைப்புக் காட்டுகின்றன. ஆனால் சமூகக்கல்வி, விஞ்ஞானம் முதலிய பாடங்களை ஆங்கிலத்தில் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. பிள்ளைகளுடைய ஆங்கிலத்தேர்ச்சியோ மிகக் குறைவு. இந்நிலையில் குருடும் குருடும் குருட்டாட்டமாடிக் குழிவிழும் மோசடிக்கு நாம் துணை போக வேண்டுமா?

**தமிழ்க்கல்வி**

ஒரு காலத்தில் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களிடம் தமிழ் கற்றவர்கள் தாம் தமிழறிஞர்களாக வலம் வந்தார்கள். அவர்கள் இலக்கண வரம்புகளைப் பேணினா். மணிகோர்த்தது போன்ற கையெழுத்து. தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உடை, நடை சமூகத்தின் ஒழுக்கத்துக்கு அவர்கள் காவலர்கள். இன்று தமிழ்ப் பட்டதாரிகளிற் பலர் எழுதும் வசனங்கள் பிழைமலிந்து காணப்படுகின்றன. இன்றைய தமிழாசிரியர்களுடைய நடை, உடைகள் பற்றி சொல்ல என்ன இருக்கிறது?

**விஞ்ஞானக்கல்வி**

தமிழ்க்கல்வி இவ்வாறாக, விஞ்ஞானக்கல்வியின் நிலையை நோக்கலாம். Pre SSC என்று சொல்லப்பட்ட ஒன்பதாம் வகுப்பிலேயே ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்ய நாம் ஆற்றுப்படுத்தப்பட்டோம் : செய்தோம். இன்று, ஆய்வுகூடத்துக்குள் காலடி வைக்காமலேயே, க.பொ.த (உ/த) தேறிப் பல்கலைக்கழகம் செல்லலாம்.

**நல்லாசிரியர் என்பவர் யார்?**

எங்களுடைய கல்லூரி வாழ்க்கையில் சந்தித்த ஆசிரியர்களுள் யாராவது ஒருவர் மிக ஆழமான மனப்பதிவை ஏற்படுத்தியிருப்பார். அவர் மீது தனி மதிப்பு ஓர் ஒட்டுதல் – ஏற்பட்டிருக்கும். அந்த உறவு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டிருக்கும்.

யார் அந்த நல்லாசிரியர்?

யாரைச்சந்தித்த பிறகு உலகத்தை நீங்கள் முன்பு பார்த்தது போல் பார்க்கவில்லையோ, நீங்கள் குருவைச் சந்தித்துள்ளீர்கள் என்பது பொருள். மெத்தப்படித்த நரேந்திரன் என்ற இளைஞன் காளிகோயில் பூசாரி ராமகிருஷ்ணரைப் போய்ப் பார்க்கிறான். அவனுள் ஆயிரம் கேள்விகள். "வா மகனே, உனக்காகத்தான் காத்திருக் கிறேன்!" என்ற ராமகிருஷ்ணர் அவன் தலை மேல் கையை வைக்கிறார். "பாரறியேன் விண்ணறியேன்" என்ற நிலை. நரேந்திரன் விவேகானந்தராகி விட்டான்.

நல்லாசிரியன் சதா அறிவுத்தேடலில் ஈடு பட்டிருப்பான். "கற்றலை நிறுத்துகின்ற கணமே நீ ஆசிரியனாக இருக்கும் தகுதியை இழந்து விடுகிறாய்!" என்கிறார் தத்துவஞானி ராதாகிருஷ்ணன்.

தன் மாணாக்கரிடையே சுதந்திர சிந்தனையை வளர்ப்பது ஆசிரியனுடைய கடமை. மாணவனைக் கேள்விகேட்க ஊக்குவிக்க வேண்டும். அதுதான் சோக்கிரதீஸ் பயன்படுத்திய உத்தி. அதுதான் Dr.சிவப்பிரகாசம் கையாண்ட முறை. இன்று நாம் காண்பதென்ன?

கேள்வி கேட்கும் மாணவர்களை ஆசிரியர்கள் விரும்புவதில்லை. பல்கலைக்கழகங்களிலும் நிலமை இதுதான். பிறகெப்படி சுதந்திரச் சிந்தனை முகிழ்க்கும்? தன்னம்பிக்கை கொண்ட ஆசிரியன் மாணவர்களின் கேள்விக்கு அஞ்சான். அதற்கும் அப்பால், தனக்குத்

தெரியாததை "தெரியாது!" என்று சொல்லும் திராணி ஆசிரியனுக்கு வேண்டும். அந்த நேர்மையை மாணவர் மதிப்பர்.

"பிள்ளைகளை நேசிப்பவனாய், ஒவ்வொரு பிள்ளையும் பெறுமதி மிக்க பிரஜையாய் வரக்கூடியவன் என்று நம்புவோனாய், பிள்ளைகளுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொள்பவனாய், குழந்தை உள்ளம் எவ்வாறு தொழிற்படுகிறது என்பதை விளங்கிக் கொண்டவனாய், அதற்கு மேலே தானும் ஒரு காலத்தில் குழந்தையாய் இருந்ததை மறவாதவனாய் இருப்பவனே நல்லாசிரியன்". என்கிறார் ரஷ்ய கல்வியாளர் ஸூக்கோமிலின்ஸ்கி.

எவ்வளவு பெரிய பொறுப்பு! இந்நாளைய ஆசிரியர்களுக்கு, தாம் கற்பிக்கும் பாடப்பரப்புக்கும் அப்பால், மாணவர்களுடைய தனிப்பட்ட பிரச்சனைகளுக்கு செவிசாய்க்க, அவர்களுக்கு அறிவுரை கூற, அவர்களுக்கு வழிகாட்ட அவகாசம் உண்டா?

**பாடசாலை அனுமதி**

பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதி பெறுவதற்குப் பேற்றோர் படாத பாடு படுகிறார்கள். தம் பிள்ளைகளுக்கு அதிகபட்ச கல்வி வசதி கிடைக்கக்கூடிய பாடசாலைகளை நாடுவதில் தவறில்லை அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளுக்கு தமது கட்டிடங்கள் முதலியவற்றைப் பராமரிக்கும் செலவினம் உண்டு. அவர்கள் பெற்றோரிடம் நன்கொடை கோருவதைக்கூட நியாயப் படுத்தலாம். இலவசக் கல்வியின் நோக்கத்தையே சிதறடிக்கும் இவ்விழிசெயலில் இலவசக்கல்வி பெற்று முன்னேறியவர்களே ஈடுபடுகின்றனர். ஆனால் அரசாங்க பாடசாலைகள் பகிரங்கமாகவே நன்கொடை கோருகின்றன. வன்னியில் அடியுண்டு வந்த பிள்ளைகளிடம் நன்கொடை கோரிய அதிபர்களை நான் அறிவேன். பாடசாலை

அபிவிருத்திச்சபை இந்த ஊழலுக்குக் கேடயமாக இயங்குகிறது. தேசியப்பாடசாலைகளிற்கூட இதற்குக் கணக்குக் கிடையாது. அவ்வப்போது கல்வியமைச்சர் நன்கொடை வசூலிக்கும் அதிபர்களை எச்சரிப்பார். ஒரு மாதத்திற்கு முன் வட மாகாண கல்விப்பணிப்பாளர் நன்கொடை பெறுவது சட்டவிரோதம் எனப்பத்திரிக்கைக்கு அறிக்கை விட்டார். அதற்கு மேல் தொடர் நடவடிக்கை இருக்காதென்பது மட்டும் அநுபவ ரீதியாக நாம் கண்ட உண்மை.

கல்வியின் பெரும்பயனாக ஒருவனுக்குப் பணிவு வேண்டும். ஆனால், படித்தவர்கள் செருக்குடையவர்களாய், நேர்மையற்றவர்களாய், மோசடிப்பேர்வழிகளாய் இருக்கக் காண்கிறோம். பாமரர்கள் பழி பாவங்களுக்கு அஞ்சிய வர்களாய், நல்லவர்களாய், பேராசையற்றவர்களாய் வாழ்கிறார்கள்.

"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை
என்சொல்கேன் மதியை என்
சொல்லுகேன்" என்று கதறுகிறார் தாயுமானவர்.

## பண்பாட்டு வீழ்ச்சி

அன்புக்குரியவர்களே தமிழர் சமூகம் அளவுக் கதிகமாக வணிகமயப்பட்டு விட்டது. எமது முன்னோர்கள் மதித்துப் பேணிய விழுமியங்களைக் கைநெகிழ விட்டு விட்டு பொருளை நாடி ஓடிக்கொண்டிருக்கிறது. ஆலயங்கள் கூட அறங்காவலர்களின் – உபயகாரர்களின் பேரும் புகழும் பிரகாசிக்கும் களங்களாகத் தாழ்ந்து போயுள்ளன. இந்த ஓட்டத்தில் சமயச்சடங்குகள் செய்யும் அந்தணர்கள் முன்னே நல்ல lead எடுத்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நல்லறங்களை நல்லொழுக்கத்தை – இளைய தலைமுறைக்கு எடுத்துச்செல்ல அவர்களுக்கு நேரமில்லை.

இளைய தலைமுறை TV கலாச்சாரத்தில்

மூழ்கிக்கிடக்கின்றது. ஆறுமுகநாவலரோ அப்துல்கலாமோ அவர்களை ஈர்க்கவில்லை. கனவுத்தொழிற்சாலையான சினிமாவில் பவனிவரும் நாயக நாயகியர் இவர்கள் கற்பனையை, பேச்சை, மூச்சை ஆக்கிரமித்துள்ளனர். தமிழ்ச்சினிமா வன்முறையையும், பாலுணர்வையும் வளர்க்கிறது. இந்த நச்சுச்சூழலிலிருந்து நம் இனம் மீள வழியுண்டா?

இரண்டு வாரத்திற்கு முன் மன்னாரில் நடந்த கருத்தரங்கொன்றில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ரதிதரன் ஒரு கேள்வியை எழுப்பினார். எமது பண்பாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? சபையில் மௌனம். அவரே பதிலையும் தந்தார். Cell-phone தொலைத்தொடர்பில் ஏற்பட்டுள்ள பெரும் முன்னேற்றத்தால், எவர் கையிலும் Cell. இது இளந்தலைமுறையினரிடம் ஏற்படுத்தும் பாதிப்பை சீரழிவை பெற்றோர்கள் சிந்திக்க வேண்டும். போருக்குப் பிந்திய வடபுலம் துஷ்பிரயோகமும் இளவயதுப்பெண்கள் கருவுறுதலுமாகச் சீரழிகின்றது. மாவட்டச்செயலாளரிடமும், சிறுவர் நன்னடைத்தை அலுவலர்களிடமும் இருக்கும் தகவல்கள் அதிர்ச்சி தரக்கூடியவை. பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் இணையத்தளத்தில் புகுந்து என்ன செய்கிறார்கள் எனக்கண்காணியுங்கள். சீலை முள்ளில் பட்டாலும் முள் சீலையில் பட்டாலும் கிழிவது சீலைதான்.

## நிறைவு

அன்புக்குரியவர்களே, நான் இங்கு முன்வைத்த கருத்துக்கள் சிலருக்கு உவப்பானவையாய் இல்லாதிருப்பின் என்னை மன்னித்துவிடுங்கள். இராசதுரை என்ற கல்விமானுக்கு நான் விசுவாசமாய் இருக்கவேண்டும். அதற்கும் மேலே, எனக்கு நான் விசுவாசமாய் இருக்கவேண்டும். "தன்நெஞ்சறிவது பொய்யற்க!"

இப்பேருரையைக் குருதேவர் தாகூரின்

வேண்டுதலோடு நிறைவு செய்வது பொருத்தமாய் இருக்கும்:-

"எங்குமனத்தில் அச்சம் ஒழியத் தலநிமிர்ந்தே உள்ளதோ,
எங்கு அறிவுத்தடை இல்லையோ,
எங்கு உலகம் குறுகிய சுவர்களால் துண்டாடப் படவில்லையோ,
எங்கு சத்தியத்தின் ஆழத்திலிருந்து சொற்கள் பிறக்கின்றனவோ,
எங்கு சலியாத முயற்சி செம்மையை நோக்கி தன்கைகளை நீட்டுகிறதோ,
எங்கு பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை காலாவதியான வளக்காறு என்ற வறண்ட பாலையுள் வழிதவறிப்போகவில்லையோ,
எங்கு மனம் சதா விரிந்து கொள்ளும் சிந்தனையையும் செயலையும் நோக்கி உன்னால் வழிநடத்தப்படுகிறதோ,
அந்த சுதந்திர சுவர்க்கத்துள், என் அப்பனே, என் நாடு விழிப்புறுவதாக!

கல்விமான் கணபதி இராசதுரை
(B.Ed, B.A - (Pol - Sc), MA (Ed), SLPS - 1)

- அதிபர் :
  மத்திய கல்லூரி – யாழ்பாணம்
  மத்திய கல்லூரி – அச்சுவேலி
  நடேஸ்வரா கல்லூரி – காங்கேசன்துறை
  மத்திய கல்லூரி – யாழ்ப்பாணம்
  கட்டுவன் புலம் ம.வி – தெல்லிப்பளை

- முல்லைத்தீவு அதிபர் சங்க தலைவர்...
- அதிபர் நிர்வாக ஆலோசனைக் குழு உறுப்பினர்.

- அகில இலங்கை சமாதான நீதவான்
- யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினர்

- யாழ் மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டச்சங்க தலைவர்...
- அகில இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்க தலைவர்...
- அகில இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச்சங்க இணைப்பாளர்....

- அரிமாக் கழகத்தில் (Lions Club) யாழ் வலய தலைவர்

Noble



**நவிலரும் சேவை செய்தார்** (அறுசீர்விருத்தம்)

மந்துவில் தந்த நல்லோர் மதிப்பின்ரா சதுரைப் பேரர்
முந்துறு புரட்சி யோடு முகிழ்ந்திடும் புதுமை ஆற்றல்
தந்துடன் சமுதா யத்தின் சமத்துவம் சமைக்க வென்று
வந்துயர் சேவை செய்த வண்மையை எண்ண லாமோ!

கல்வியா சானாய் நல்லோர் கருதிடும் அதிபர் ஏறாய்
சொல்லியே முடிக்கொ ணாத சொல்லரும் பணிக ளோடு
பல்கியே பேர வைமேல் பகரரி மாவதி பர்கள்
நல்கியே மேன்மை கூட்ட நவிலரும் சேவை செய்தார்!

*புலவர்- மு.பாலசுபபிரமணியம்*

வெளியீடு அனுசரணை: க.நடராசா (சகோதரர்)

0779605304